# கொக்கட்டிச்சோலை
# தான்தோன்றிஸ்வரர் பத்து
# மயானப்பத்து




ஆக்கம் :

வைரமுத்து கணேசன்

சேனைக்குடியிருப்பு 02

கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பத்து

கருணை தரும் செல்வக் கணபதியை வந்தித்து
மருவு தமிழ்ச் சொல்லாலே மகேஸ்வரன் புகழை - பெருமையுடன்
தித்திக்க நான் பாட சிறந்த கவியருளும்
முத்தி தரும் வித்தகன் தாழ் துணை

வனம் தனில் மனம் விட்டு வாழ்ந்த வேடன்
மறவாமல் கொக்கட்டிக் காடுதேடி
தினமுமவன் வேட்டைக்குச் செல்லும் போது
திருவருள் தன்னாலே லிங்கம் கண்டு
மனமகிழ யென்னாளும் வணங்க வைத்த
மகேஸ்வரா உன்புகழை சிறியேன் செப்ப
அனலுருவாய் விளங்கு தான் தோன்றித் தேவே
அப்பனே கண்பாத்து அருள் செய்வாயே

வாழ்நாளில் பல இன்னல் கண்டவேடன்
வரம் தரும் லிங்கத்தைக் கண்ட பின்பு
தாழ் வணங்கி அடுத்தவர்க்கும் எடுத்துச் சொல்லி
தயங்காமல் இருக்குமிடம் கூட்டிச் சென்று
ஊழ்வினையை வெல்வதற்கு உகந்தலிங்கம்
உருவான இடம் கண்டு வணங்கவைத்த
ஏழ்மைமிகு தான்தோன்றி உதித்ததேவே
ஏகாம்பரனே கண்பார்த்து அருள் செய்வாயே

விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் விருத்தனான
வித்தகனார் லிங்கவுரு கண்டமட்டில்
எண்ணுதற் கடங்காத பக்தர் கூட்டம்
என்னாளும் நித்திய பூசை செய்ய
சின்ன மடாலயத்தை உண்டு பண்ணி
சிறப்பாக எப்போதும் வணங்கவைத்த
தான்தோன்றிஸ்வரனே தயவு கூர்ந்து
தத்துவனே கண்பார்த்து அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாக வாழ் நாளைக் கழித்திடாமல்
விருப்பப்போல் ஊர் மக்கள் ஒன்று கூடி
கோனாருக்கு சிறு குடிசை கோயில் கட்டி
கொண்டாட்டம் குதுகலமாய் நடத்தும் போது
தானாக அற்புதங்கள் நிகழ்த்தி வைத்து
தரணிவாழ் மக்களைக் காக்க வென்று
தானாக வந்து தித்த தான் தோன்றித்தேவே
சதாசிவனே கண்பார்த்து அருள் செய்வாயே.

வுருவான ஆலயத்தின் பெருமைதன்னை
உள்ளத்தில் அன்புடைய பக்தரெல்லாம்
கருப்பொருளாம் கண்ணுதற் பெருமான் தன்னை
கண்டு கரம் கூப்பிட வேண்டுமென்று
உருக்கமுடன் கால்நடையாய் நடந்துவந்து
உருவான லிங்கத்தைக் காணவைத்த
பெருமை பெறு தான்தோன்றி அமரும் தேவே
பெருமானே கண்பார்த்து அருள் செய்வாயே

வூனவுடல் பெற்றிட பெருமைக்காக
உய்யவழி இதுவென்று உணர்ந்து கொண்டு
தேனொழுகும் மலர் தேடும் வண்டுபோல
தேசிகனே உன் பாதம் வணங்கும் போது
ஈனமற்ற வெள்ளையனும் அங்கு வந்து
இது வென்ன வேடிக்கை என்றிகழ்ந்தான்
கானகத்தே தான்தோன்றி அமர்ந்ததேவே
கருணாகரனே கண்பார்த்து அருள் செய்வாயே

வெள்ளெருது கல்லாலே செய்து வைத்து
வேளையாது தவறாமல் பூசை பண்ண
வெள்ளையனின் கண்ணிலே பட்ட அன்றே
வேடிக்கையாக அவன் இகழ்ந்து பேசி
கள்ளமற்ற கல்லெருது புல்லு உண்டால்
கயவர்களே இதைவணங்க அனுமதிப்பேன்
உள்ளத்தில் இரக்கமின்றி உரைத்திட்டானே
உமைபாகா கண்பார்த்து அருள் செய்வாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுவது கிடைக்கின்ற வெள்ளியன்று
வெள்ளையனே நீவந்து பாருமென்று
ஆண்டாண்டு காலமாய் அடிமையான
அடியவரும் வாய்திறந்து சொல்லிவிட்டு
மன்றாடி அடியவரும் நின்ற போது
மகனே நீ அஞ்சலேலன் றெடுத்துரைத்த
தான் தோன்றீஸ்பரனே தயவு கூர்ந்து
சங்கரனே கண்பார்த்து அருள் செய்வாயே

வையகத்தில் கல்லெருது புல்லு உண்ணும்
வலுமிக்க வேடிக்கை பார்ப்போமென்று
மையலுடன் வெள்ளையனும் துள்ளியோடி
வந்தானே ஆலயத்தை உடைப்பதற்கு
மெய்யுருகிப் புல்வைத்துப் பூசை பண்ணி
மெய்யடியார் இதையுண்ண வேண்டுமென்றார்
ஐயாகோ தான்தோன்றி அமரும் தேவே
அப்பனே கண்பார்த்து அருள் செய்வாயே.

வொன்றுமறியாத நான் அன்றுரைத்த
ஒப்புதலை இன்று நிறை வேற்றுதற்கு
தின்றிடுவாய் இந்தாபுல் இந்தாவென்று
திருவருளை நினைத்ததுமே புல்லை நீட்ட
நன்றாக வால் கிழப்பி சோம்பல் போக்கி
நல்லபடி புல்லுண்டு சாணம் போட்ட
தான்தோன்றீஸ்பரனே தயவு கூர்ந்து
சங்கரனே கண்பார்த்து அருள் செய்வாயே

வோதுகின்ற வேதத்தின் ஓசை கேட்டு
உண்மையிது என்றுணர்ந்த வெள்ளைக்காறன்
தீது செய்யவெசன்மனது நினைத்திட்டாலும்
சிதம்பரமே இதைப் பொறுக்க வேண்டுமெனறான்
வாதுசெய்து தோற்றிட்ட அறிவிலிக்கும்
வரமருள தான்தோன்றி அமர்ந்திருக்கும்
மாது உமைபாகனே மனமிரங்கி
மகஸ்பரா கண்பார்த்து அருள் செய்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளவியின் யிருபக்க நெருக்கம் போல
வணங்கிடும் அடியவர்க்கு வரம் கொடுத்து
பௌவியமாய் மக்களைப் பாதுகாத்து
பற்பல அற்புதங்கள் நிகழ்த்தி விட்டு
சௌக்கியமாய் எருதேறி அமர்ந்திருக்கும்
சதாசிவனேயுன் பெருமை அடியேன்காணேன்
மௌனத்திலிருக்கும் தான்தோன்றித்தேவே
மனமகிழ்ந்து கண்பார்த்து அருள் செய்வாயே

இவ்வாறு உன்கிருபை நடந்ததென்று
இதயத்தில் பட்டதை எடுத்துரைத்தேன்
எவ்வாறோ இதில் பிழைகள் இருந்திட்டாலும்
என்குருவே அத்தனையும் நீ பொறுத்து
வெவ்வேறு பொருள் இதற்கு உரைத்திட்டாலும்
வேறொன்றும் நானறிய மாட்டேனையா
திவ்வியமாய்த் தான்தோன்றி வந்தமர்ந்த
திருவுருவவே கண்பார்த்து அருள் செய்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானப் பத்து

அகிலத்தை வயிற்றினுள்ளே
அடக்கிய முத்தநாதா
மகிமைசேர் உனதுபாதம்
மன்றாடி சிரமேற் சூட்டி
இனிமையாய் மயான பாக்கள்
இன்பமாய் அடியேன் செப்ப
கனிபெற்ற கணநாதன் தாழ்
கண்ணிறை காப்புத்தானே

ஆதியோடந்த மில்லா
அருட்பெரும் சோதியாகி
பாதியில் மங்கை வைத்து
பனிமலைத் தலையராகி
அரவத்தை அணிகலாமாய்
அங்கத்தில் அணிந்து நிற்கும்
பரம்பொருள் சிவனேயுந்தன்
பாதார விந்தம் போற்றி

மாயனே கீதை சொன்ன
மகிமையால் உலக ஆத்மா
காயத்தை விட்டு விட்டு
கழலடி தேடும் போது
தூயனே மனமிரங்கி
துன்பங்கள் கொடுத்திடாமல்
ஆயனே அன்பு கொண்டு
அருட் பதம் தருகுவாயயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையில் சிறந்த தாயே
பொன்னடி பாத் போற்றி
தருமத்தின் தாயே வையம்
சகலமும் நீயே தாங்கி
குறுமணி உருண்டையாக்கி
குழவி போல்மடியில் வைத்து
திறமையாய்க் காக்கும் தாயே
திருவடி சரணம் அம்மா

எண்ணில்லா உயிர் படைத்து
எல்லோர்க்கும் உணவழித்து
மண்ணிலே மேடைகட்டி
மனம் போல நடிப்பும் ஊட்டி
எண்ணம்போல் வாழ்ந்துவிட்டு
இறையடி தேடும்போது
அன்னலே மனமிரங்கி
அருட்பதம் நல்குவாயே

மானிட ஜென்மம் என்ற
மகத்தான பிறவிபெற்று
இனிமையாய் மழலை பேசி
இதயத்தைக் குளிரவைத்து
வாழ்ந்தது போதும் என்று
வருகின்றார் சடத்தைவிட்டு
ஆழ்கடல் நீல வண்ணா
அருமுவாய் மனமிரங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்சாண் உடம்பும் விட்டு
எதிலுமே பற்றும் விட்டு
உன்னடி தேடிவாறார்
உறுதுணை நீதான் சுவாமி
பொன்னடி பாதம் தன்னில்
போகமாய் இடம்கொடுத்து
கண்ணான வைகுந்த பாதம்
கண்ணா நீ அருள வேண்டும்

(இப்பாடலை திருமணமாகாதவர்கள் இறந்தால் பாடுவதைத் தவிர்க்கவும்.)

பனிபோன்ற வாழ்வை நம்பி
பகலிரவாய் உழைத்து
தனிமையில் செல்வம் தேடி
சந்ததி தனக்கும் ஈந்து
வனிதையர் சுகத்தில் நீந்தி
வாழ்நாளில் வீணே நொந்து
தனிமையாய் வாறார் சுவாமி
தரிசனம் தருகுவாயே

---

அன்னையும் தந்தைசுற்றம்
அன்புள்ள மனைவி மக்கள்
இணையிலா வைகுந்தம் சேர
இறைஞ்சுவோம் மனமுருகி
இருப்பது பொய்தானென்றும்
இறப்பது மெய்தானென்றும்
திருப்தியாய்ச் சுவர்க்கம் சேர்க்க
சிவனடி வணங்கு வோமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினம் தீர்த்து வைக்கும்
விநாயகர் பாதம் போற்றி
பக்கத்தில் துணையாய் நிற்கும்
பரம் பொருள் சிவனே போற்றி
எக்காலும் இடர்கள் நீக்கும்
ஏக வைகுந்தா போற்றி
அக்கினிச் சுடலை காக்கும்
ஆதியே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brilliant Prenters - Kalmunai - 067 2229778

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org